# சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

செய்திமடல் - 33 | 05-01-2012



**29-12-2011 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : தமிழில் ஒலிநூல்கள்**

**தொடக்கவுரையாடல் : மு. மயூரன்**

கண்களால் வாசிக்கத் தேவையில்லாதபடி, காதால் ஒலிவடிவில் கேட்டுணரக்கூடியவாறு வெளியிடப்படும் நூல்கள் ஒலி நூல்களாகும்.

மிக நீண்டகாலமாக ஒலி நூல்கள் உலகில் வெளியிடப்பட்டுவந்துள்ளன. இசைத்தட்டுக்களாக, ஒலியிழைகளாக, இறுவட்டுக்களாக ஒலிநூல்கள் பல மொழிகளிலு வெளியிடப்பட்டு வருகின்றன.

வணிக ரீதியாகவும் தன்னார்வ அடிப்படையிலும் ஒலிநூல்கள் உருவாக்கப்பட்டு வெளியிடப்படுகின்றன.

கணினித்தொழிநுட்பம் வந்த பிறகு, மனிதக்குரலால் ஒலிப்பதிவு செய்யப்படும் ஒலிநூல்கள் மட்டுமல்லாது மென்பொருட் குரற் தொகுப்பிகளைப் பயன்படுத்தியும் உரையிலிருந்து குரல்வடிவத்துக்கு மாற்றும் முறைகளைப்பயன்படுத்தியும் வேகமாகவும் எளிதாகவும் ஒலி நூல்கள் ஆக்கப்படுகின்றன. ஆனால் இவ்வாறு ஆக்கப்படும் ஒலி நூல்கள் முழுமையாக மனிதக்குரல் மூலம் பதிவுசெய்வதைப்போன்ற திருப்தியைத் தரவல்லனவாக இன்னமும் வளர்ச்சியடையவில்லை.

ஒலிநூல்களின் பயன்பாடு பலவாக இருப்பினும் கண்பார்வைச் சவால்கள் கொண்டவர்களுக்கு இவை மிகவும் பயனுடையவையாகும். இதைவிட தூர இடங்களுக்கு அடிக்கடிப் பயணம் போகிறவர்களுக்கும் , கண்ணால் நூல்களை வாசிக்க விரும்பாதவர்களுக்கும் ஒலி நூல்கள் பயனுள்ளவை.

கிழக்குப்பதிப்பகம் போன்ற நிறுவனங்கள் தமிழில் இன்று ஒலிநூல்களைத் தயாரித்து வணிகம் செய்கின்றன.

நூலகம் திட்டத்தில் ஒரு பகுதியாக ஒலிநூல்கள் இணைக்கப்பட்டன. ஆயினும், நூலகம் திட்டத்தின் சில மட்டுப்பாடுகள் காரணமாக ஒலி நூல் திட்டத்தினைத் தனியாகச் செய்யவேண்டியுள்ளது.

இன்று அனைவரது கையிலும் உள்ள செல்பேசிகள் ஒலிக்கோப்புக்களை இயக்கும் வல்லமை உடையவையாகப் பெரும்பாலும் இருப்பதால் ஒலிநூல்கள் மிகப்பரந்த அளவில் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

கணினித் தொழிநுட்பம் பரவலாகி இருப்பதால் ஒலி நூல்களை உருவாக்குவதும் திருத்தித் தொகுப்பதும் இன்று இலகுவானதாக மாறியுள்ளது.


ஒலிநூல்களுக்கென உலகளாவிய நியமங்கள் உள்ளன. இவற்றில் பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமம், DAISY (Digital Accessible Information System) என்பதாகும். நாம் உருவாக்கும் ஒலி நூல்களை இந்த நியமத்தின் படி உருவாக்கினால் பார்வையிழந்தவர்களுக்கு பயன்மிக்கதாய் அமையும். இந்த நியமத்தின் படி ஒலி நூல்களை உருவாக்குவதற்கான கட்டற்ற திறந்தமூல மென்பொருள்கள் கிடைக்கின்றன.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம் கூட்டு முயற்சியாக ஒலிநூல்களை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. இதற்கான பயிற்சிகள், கருவிகள், நடைமுறைகள் போன்றவற்றைப்பற்றிக் கலந்தாலோசிக்கவேண்டியுள்ளது.

ஒலிநூல் திட்டத்துக்கான வலைத்தளம் தற்போதுள்ள வடிவம் பொருத்தமானதல்ல என்றும் மீடியாவிக்கியைப் பயன்படுத்துமாறும் விமலாதித்தன் கருத்துத் தெரிவித்தார்.

ஒலிநூல் திட்டம் முழுக்க முழ்க்க நன்கொடைகளில் தங்கியிராது தனது உழைப்புக்கும் இருப்புக்குமான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளைத்தேடிக்கொள்ள வேண்டும் என்ற சி. சிவசேகரத்தின் கருத்தினைத் தொடர்ந்து நடந்த உரையாடலில், குறிப்பிட்ட அளவு ஒலி நூல்கள் தயாரிக்கப்பட்டதும் அவற்றை இறுவட்டு ஒன்றில் பதிவு செய்து நியாயமான விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் வருமானத்தை ஈட்டலாம் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஆனால் இணையத்தில் ஒலிநூல்கள் இலவசமாகவே கிடைக்கும்.

மிகுதி அடுத்தபக்கம்



*சித்தி அமரசிங்கம் (ஜனவரி 5, 1937 - ஜனவரி 2007)* என்று அறியப்படும் த. அமரசிங்கம் திருக்கோணமலை மாவட்டத்தை சேர்ந்த ஒரு கலைஞரும் சேகரிப்பாளருமாவார். ஈழத்து இலக்கியச் சோலை என்ற பதிப்பகத்தை நிறுவி அதன்மூலம் ஏராளமான நூல்களை வெளியிட்டுள்ளார்.

அ. சச்சிதானந்தம் என்பவரோடு இணைந்து அமரன் ஆனந்தன் என்ற அமைப்பின் கீழ் தமிழில் ROCK-N-ROLL எனும் இசையுடன் கூடிய நடன நிகழ்வை மட்டக்களப்பு, திருக்கோணமலை, கேகாலை போன்ற இடங்களில் மேடையேற்றியுள்ளார்.1958 இல் கலைவாணி நாடக மன்றத்தினை உருவாக்க பங்களித்த இவர் அமரன் ஸ்கிரீன் என்ற அமைப்பை உருவாக்கி திருக்கோணமலைச் சூழலில் பல்வேறு நாடகங்களை உருவாக்கி அளித்திருந்தார்.

இவர் 1978இல் ஆர். வேதநாயகம் தயாரித்த "தென்றலும் புயலும்" என்ற திரைப்படத்தை இயக்கி அதில் நடித்துமுள்ளார். திருக்கோணமலை தொடர்பான ஆவணங்களை சேகரிப்பதில் பெரும் அக்கறை கொண்ட இவர் தனது சிறு வீட்டில் ஏராளமான பழைய ஆவணங்களையும் நூற்களையும் சேகரித்து வைத்திருந்தார். திருக்கோணமலை மாவட்டத்தை சேர்ந்த முக்கிய ஆளுமைகள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதையும் தன் வாழ்நாள் பணியாக கொண்டிருந்தார்.

1952 இல் யாழ் எனும் கையெழுத்து சஞ்சிகையினை ஆரம்பித்து நடத்தி வந்தார். பிரமீள், சி. சிவசேகரம், புலவர் சத்தியமூர்த்தி போன்றவர்கள் இச்சஞ்சிகையில் எழுதியுள்ளனர்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## தமிழில் ஒலிநூல்கள்

(முன்பக்கத் தொடர்ச்சி)

ஒலிநூல்களுக்கான உரிமம் பற்றிய உரையடாலின் போது, ஒலிநூல்கள் காப்புரிமை கொண்டனவாக அல்லாமல், கட்டற்றவையாக, அளிப்புரிமை கொண்டனவாக வெளியிடப்படவேண்டும் என மு. மயூரனால் ஆலோசனை முன்வைக்கப்பட்டது. இதற்கு Creative Commons Attribution-NonCommercial-ShareAlike (CC BY-NC-SA) உரிமம் பொருத்தமானதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

ஒலி நூலாக்கப்படவேண்டிய நூல்களுக்கு, அவற்றின் பதிப்புரிமையாளர்களிடம் முன் அனுமதி பெறப்படவேண்டும் என்றும் ஆலோசிக்கப்பட்டது.

விழிப்புலன் அற்றவர்களுக்கான பாடசாலைகளுக்குச்சென்று, அங்கே அவர்களுக்கு அதிகம் ஒலிவடிவில் தேவைப்படும் நூல்கள் எவை என்ற பட்டியலை முதலில் தயாரித்து அவற்றை ஒலிநூலாக்கத் தொடங்கலாம் என்ற கருத்தும் மு. மயூரனால் முன்வைக்கப்பட்டது.

ஒலி நூல்களை உருவாக்கும்போது ஏற்படும் சிக்கல்கள் பற்றிய உரையாடலில்,

துல்லியமான உச்சரிப்புச் சர்ச்சைகளில் மினக்கடாமல் கேட்பவருக்கு தெளிவாகவும் மயக்கமின்றியும் புரியும்படியாக வாசித்தாலே போதுமானதென்றும், ஒலிஅளவு பற்றி ஒலி அமைப்பு விடயங்களில் தொழின்முறைத்தேர்ச்சி பெற்ற ஒருவரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது.

நூல்களின் இடையில் வரும் படங்களை பார்வை இழந்த ஒருவருக்கும் புரியும் படியாக விபரித்தலே உண்மையான் ஒலிநூல்களுக்கான நியமம். இந்த விடயத்தில் அவ்வப்போது, இப்பிரச்சினையை எதிர்கொள்கிற நேரத்தில் கலந்தாலோசித்து முடிவெடுக்கலாம் என்று ஒத்துக்கொள்ளப்பட்டது.

ஆய்வுக்கட்டுரைகளில் வரும் அடிக்குறிப்புக்களை எப்படிக்கையாள்வது என்ற கேள்வியை தனுஜன் எழுப்பி, ஒவ்வொரு அடிக்குறிப்பினையும் கட்டுரையில் அவ்வடிக்குறிப்பு மேற்கோள் காட்டப்பட்ட இடங்களிலேயே வாசிக்க வேண்டுமா என்றும் கேட்டார். அதற்கு, எல்லா அடிக்குறிப்புக்களையும் அந்தந்த இடங்களிலேயே பதிவு செய்வது சாத்தியமற்றதென்றும், எவற்றை சேர்த்துக்கொள்வது எவற்றை விட்டுவிடுவது என்பதை கட்டுரைகளின் தன்மையைப்பொறுத்தே தீர்மானித்துக்கொள்ள வேண்டும் என்றும் பதிலளிக்கப்பட்டது.

## சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் ஒரு மீள்பார்வையும் புதுவருடமும்

(இந்த வாரம் இடம்பெறவுள்ள உரையாடலுக்கான முன்வரைவு.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம் இதுவரை காலம் கடந்துவந்த பாதை.

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் அறுவடைகள்.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம் எதிர்கொண்ட/எதிர்கொள்ளும் சவால்கள்

எதிர்கொண்ட சவால்களை வெற்றிகரமாகக் கையாளும் வழிமுறைகள்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் எதிர்காலத் திட்டங்களும் விரிவாக்கமும்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC ND

## உணர்வு!



ஒளிபுகாத
அடர்காட்டின் நடுவில்
அரிவாள்களைக் கூராக்கி
பாதை செய்கிறோம்

ஏளனச் சிரிப்புகளும்,
வன்மம் பொங்கும்
ஊளைச் சத்தங்களும்,
முற்றும் அறிந்த
மேதாவித்தனங்களும்,
திரும்பும் திசைகளிலெல்லாம்
எதிரொலிக்கின்றன.

புதைசேறு அழுத்துகிறது
புரட்ட முடியாத பாறைகளில்
யுகங்கள் கழிகின்றன.
அரவம் நெளிகிறது.
சற்றே கண்ணயர்ந்தாலும்
அட்டைகள் உயிர் குடிக்கின்றன.
சதுப்பு நிலத்தில்
தெறித்து மின்னும்
எங்கள் வியர்வைத் துளிகளின்
வெளிச்சத்தில்தான்

பாதை தொடர்கிறது.

பின்னொரு நாளில்
ஒளிபுகாத
அடர்காட்டின் நடுவில்
அரிவாள்களைக் கூராக்கி
பாதை செய்கிறோம்

ஏளனச் சிரிப்புகளும்,
வன்மம் பொங்கும்
ஊளைச் சத்தங்களும்,
முற்றும் அறிந்த
மேதாவித்தனங்களும்,

திரும்பும் திசைகளிலெல்லாம்
எதிரொலிக்கின்றன.

புதைசேறு அழுத்துகிறது
புரட்ட முடியாத பாறைகளில்
யுகங்கள் கழிகின்றன.
அரவம் நெளிகிறது.
சற்றே கண்ணயர்ந்தாலும்
அட்டைகள் உயிர் குடிக்கின்றன.
சதுப்பு நிலத்தில்
தெறித்து மின்னும்
எங்கள் வியர்வைத் துளிகளின்
வெளிச்சத்தில்தான்
பாதை தொடர்கிறது.

பின்னொரு நாளில்

பனிக்கட்டிகள்
சேகரிக்க வரும்போழுது
நீ இதனை நம்ப மறுப்பாய்
நாங்கள் நம்ப மறுத்ததைப் போல.

ஆனால்
நாங்கள்
இப்படித்தான் வாழ்கிறோம்,
வாழ்ந்தோம்.

எது தூண்டிற்று
என நீ கேட்பாய்.
உணர்வு என்பேன்.
அதன் பொருளை
அகராதிகளில்
கண்டறிய முடியாது.

பனிக்கட்டி மறந்து நீ
பதிலின் விளக்கம் கேட்பாய்.
உரையாடல் தொடர்கையில்
மாலை கவிந்து
நட்சத்திரங்கள்
முளைக்கத் துவங்கும்.

புதிய கலாச்சாரம் - செப்டம்பர் 2008
நன்றி :வினவு